**வா.சா.1 ஆனந்தன் அவர்களின் குறுக்கு விசாரணை**

நான் விவசாயம் செய்கிறேன். எனக்கு வேறு தொழில் இல்லை. விவசாய நிலம் சுமார் 20 ஏக்கர் என் தகப்பனார் பெயரில் இருக்கிறது. வருமான வரி கணக்கு செலுத்துகிறேன். வழக்கு கடனை அதில் காண்பித்து இருக்கிறேன். பிரதிவாதியை தெரியும். கரூர் வேடிச்சிபாளையம். தற்போது அவர் காதப்பாறையில் உள்ள ஒரு அப்பார்ட்மென்ட்டில் குடியிருக்கிறார். வழக்கு சமயத்தில் அங்கு தான் அவர் குடியிருந்தார். வழக்கு கடனுறுதி சீட்டில் காதப்பாறை முகவரி தான் எழுதப்பட்டு இருக்கும். காதப்பாறையில் உள்ள ஒரு அப்பார்ட்மென்ட் இருப்பதாக தான் சொன்னார்கள். கதவு எண் மற்றும் முகவரி தெரியாது. தற்போது பிரதிவாதி லாரி, டிராக்டர் வைத்து இருக்கிறார். அவர் 20 வருடமாக என் நண்பர். அவருடைய குடும்பத்தை பொருத்து ஓரளவுக்கு தெரியும். அவருக்கு திருமணமாகிவிட்டது. அவருக்கு ஒரு பையன் மற்றும் பெண் குழந்தை இருக்கிறது. அவருடன் தொலைபேசி தொடர்பு முன்பு இருந்தது. தற்போது இல்லை. அவருடைய கைபேசி எண்.9944528727. அவர்கள் பேசி ஒரு 4, 5 வருடங்கள் இருக்கும். பிரதிவாதி கடன் கேட்ட போது ரூ.5,00,000/- என் கையில் இல்லை. என்னிடம் இருந்த ஒரு பட்டி 75 செம்மறி ஆடுகளை விற்று 15 நாட்களில் தொகையை கொடுத்தேன். மேற்படி ஆடுகளை சின்னம்முத்தாம்பாளையத்தில் உள்ள ஒரு தங்கவேல் என்பவருக்கு விற்பனை செய்தேன். அதன் மூலம் 5.50 லட்சம் கிடைத்தது. அது ரொக்க பரிவர்த்தனை. பிரதிவாதியின் பெயர் சுப்பிரமணியன் என்று A1 ஆவணத்தில் சரியாக தான் எழுதப்பட்டது. என்னிடம் காட்டப்படும் A1 ஆவணத்தில் சுப்பிரமணியன்

என்பதில் பி என்ற எழுத்து விடுப்பட்டு உள்ளது. பிரதிவாதி தான் கடன் கொடுத்த அன்று கொண்டு வந்தார். அப்போது வீட்டில் நான் மட்டும் இருந்தேன். காலை 10 மணி இருக்கும். கடனுறுதி சீட்டு எழுதியது, கடன் கொடுத்தது எல்லாம் ½ மணி நேரத்தில் நடந்தது. டிப்பர் வாங்குவதற்காக கேட்டார். அது புரோநோட்டில் எழுதப்படவில்லை. A1 ஆவணத்தை எழுதிய தமிழரசனை பிரதிவாதி தான் அழைத்து வந்தார். அவரை எனக்கு தெரியாது. பிரதிவாதி தன் வழக்கில் சொல்லியுள்ள V.S. Petrol Bunk பற்றி எனக்கு தெரியாது. அதை யார் நடத்துகிறார்கள் என்று எனக்கு தெரியாது. எனக்கும் பிரதிவாதிக்கு அறிமுகம் இல்லை என்றால் சரியல்ல. A1 ஆவணம் கையெழுத்து நிபுணர் ஆய்வுக்கு அனுப்பிய விவரம் தெரியும். மேற்படி ஆய்வு அறிக்கையில் A1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதி உடையது அல்ல என கூறப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியும். A1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து பிரதிவாதி உடையது அல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல வழக்கில் சொல்லியுள்ள தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவம் எதுவும் நடைபெற வில்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு
படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்
கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

R KANAGARAJ
Digitally signed by R KANAGARAJ
Date: 2024.02.23 17:09:13 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
கரூர்.